[2008 ஏப்ரல் 10

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம், உட்காருங்கள். (குறுக்கீடு) அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடு) திரு. கோவை தங்கம், என்ன?

*முற்பகல் 10-55*

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் ஐயா அவர்களுக்கு நன்றி தெரிவித்து, நான் கேட்டுக்கொண்ட இரண்டு லிட்டர் சீமெண்ணெயைத் தரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். மேலும், மாநில அரசு ரூபாய் 25,000/- வழங்குகிறது; மத்திய அரசு ரூ.75,000/- வழங்குகிறது; மாநில அரசு கூடுதல் நிதியாக ரூ.25,000/-ஐச் சேர்த்து, 50 ஆயிரம் ரூபாயாகவும், மத்திய அரசிடம் கேட்டு ஒரு இலட்சம் ரூபாயாகவும் பெற்றுத் தரவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களை நான் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** ஒரு குழந்தையினுடைய சாவு சிறுத்தைப் புலியினால் ஏற்பட்டிருப்பது உள்ளபடியே வேதனையானது. தாய் முன்னே நடந்து வர, பின்னே வந்த குழந்தை சிறுத்தைப் புலிக்கு இரையானது என்ற செய்தி உள்ளபடியே சிந்தையைக் கலக்கக்கூடியது. அதற்காக நாம் செலுத்துகின்ற அந்த அனுதாபத்தின் அடையாளமாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின்படி, இலட்சம் ரூபாய் அந்தக் குடும்பத்திற்குக் குடும்ப நிதியாக வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 3. கவன ஈர்ப்பு

### அரக்கோணம், ஜே.பி.எஸ். மழலையர் ஆசிரியர் பள்ளி அங்கீகாரமின்றிச் செயல்படுவது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

2008 ஏப்ரல் 10]

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், அரக்கோணம் விண்டர்பேட்டையில் ஜே.பி.எஸ். ஆசிரியர் பயிற்சிப் பள்ளி அங்கீகாரமின்றிச் செயல்படுவதால், அங்கு பயிலும் மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள நிலை" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

**அறிக்கை**

"வேலூர் மாவட்டம், அரக்கோணத்தில் ஜே.பி.எஸ். மழலையர் ஆசிரியர் பள்ளி (Pre-Primary Teacher Training Course) திரு. பரமானந்தம் என்பவரால், 2006 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருவதாக அறியப்படுகிறது. இக்கல்வி நிறுவனத்தில் 172 மகளிர் மற்றும் 9 ஆண்கள், நிறுவனத்தால் சேர்க்கை செய்யப்பட்டுள்ளனர். இம்மாணவர்கள் கடந்த 10-3-2008 அன்று வேலூர் மாவட்ட ஆட்சியர் முன்னர் முற்றுகைப் போராட்டம் நடத்தியதைத் தொடர்ந்து, இப்பள்ளி, வேலூர் மாவட்டம், இராணிப்பேட்டை மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவன முதல்வரால் 25-3-2008 மற்றும் 26-3-2008 ஆகிய இரண்டு நாட்கள் பார்வையிடப்பட்டது. விசாரணை மேற்கொண்டபோது, இப்பள்ளி சுமார் 700 சதுர அடி கொண்ட ஆஸ்பெஸ்டாஸ் கூரை வேயப்பட்ட ஒரு வீட்டில் செயல்பட்டு வந்தது என்றும், பார்வையிட்ட நாட்களில் இப்பள்ளி மூடப்பட்டிருந்ததாகவும், எண் 160, டி.வி.எஸ். காலனி, அண்ணா நகர் மேற்கு விரிவாக்கம், சென்னை-600 101 என்ற முகவரியில் அலுவலகம் கொண்டுள்ள திரு. ஸ்ரீகுமார் என்பவரின் தலைமையில் ஒரு டிரஸ்ட் மூலம் தமிழகம் முழுவதும் 121 பள்ளிகளுக்கு நடத்தப்பட்ட முதலாமாண்டுத் தேர்வில் இப்பள்ளி மாணவர்கள் தேர்வு எழுதியுள்ளனர் என்றும் தெரிய வந்துள்ளது. மாணவர்கள் மற்றும் பொது மக்களை மோசடி செய்தும், ஏமாற்றியும் இப்பள்ளி நடத்தப்பட்டு வந்ததாகவும், சேர்க்கை செய்யப்பட்ட மாணவர்களிடமிருந்து ஆண்டுக்கு ரூ.15,000/-க்கும் அதிகமாகப் பணம் வசூலிக்கப்பட்டதையும் தொடர்ந்து, மாணவர்களால் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது. இதனைத்

தொடர்ந்து, இப்பள்ளி நிருவாகிமீது இந்திய தண்டனைச் சட்டம் 420, 406 மற்றும் 506 (ii) பிரிவுகளின்கீழ் குற்றவியல் வழக்குத் தொடரப்பட்டு, நிருவாகியின் மகன் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு, ஜாமீன் பெற்றுள்ளதாகவும், பள்ளி நிருவாகி தலைமறைவாக உள்ளதால், அன்னார் இதுவரை கைது செய்யப்படவில்லை என்றும் மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவன முதல்வர் தெரிவித்துள்ளார்.

திரு. ப்பி. பரமானந்தம் மற்றும் அவரது மகன் திரு. பரமன் அன்பரசு ஆகிய இரண்டு பேர்மீதும், அரக்கோணம் நகரக் காவல் நிலையத்தில், 6-3-2008 அன்று குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்கீழ், [இந்திய தண்டனைச் சட்டம், பிரிவுகள் 420, 406, 506 (ii)] முதல் தகவல் அறிக்கை (எண் 205/08) பதிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு Pre-primary கல்வி டிரஸ்ட் நிருவாகி திரு. ஸ்ரீகுமார் என்பவரால், 11-6-2007 அன்று நாளேட்டில் வெளியிடப்பட்ட போலி நிறுவனங்கள் குறித்த அரசின் செய்திக் குறிப்பினைத் தள்ளுபடி செய்யக் கோரி, சென்னை உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டு, இவ்வழக்கு நிலுவையில் உள்ளது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, 1995 ஆம் ஆண்டிற்கு முன்னர் இயங்கி வந்த ஐந்து மழலையர் மற்றும் பள்ளி முன்பருவ (Nursery and Pre-primary Teacher Training Institutes) ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் மூடப்பட்டுவிட்டன. ஜே.பி.எஸ் மழலையர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தின் (NCTE) அங்கீகார ஆணையோ அல்லது மாநில அரசின் ஆசிரியர் கல்வித் துறையின் இணைப்பு ஆணையோ பெறாமல் செயல்பட்டு வந்துள்ளது.

நம் மாநிலத்தில், பள்ளி முன்பருவம் மற்றும் மழலையர் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களுக்கு ஆசிரியர் கல்வித் துறையின் இணைப்பு ஆணை அளிப்பது குறித்து அரசால் 1995 ஆம் ஆண்டிற்குப் பிறகு கொள்கை முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன். சுருக்கமாகச் சொல்லுங்கள், நேரம் ஆகிவிட்டது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். இந்த ஜே.பி.எஸ் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி அங்கீகாரமின்றிச் செயல்படுகிறது. ஏனென்று சொன்னால், தமிழ்நாட்டில் Nursery and Pre-primary Teacher Training பள்ளிகளுக்கு அனுமதியே 1995 ஆம் ஆண்டிற்குப் பிறகு வழங்கப்படவில்லை என்பது

2008 ஏப்ரல் 10] [திரு. சி. ஞானசேகரன்]

நிதர்சனமான உண்மை. அப்படி இருக்கிறபோது, எந்தவிதமான அங்கீகாரமும் இல்லாமல், Nursery and Pre-primary Teacher Training பள்ளி நிறைய மாணவர்களை—172 பெண்களையும், 9 ஆண்களையும் சேர்த்து, பணத்தை நிறைய வசூல் செய்து, ஒரு பகற்கொள்ளையையே அடித்து, இந்த நிறுவனம் நடத்திக்கொண்டிருப்பதை அரசு எப்படி இந்தத் துறைமூலம் அனுமதித்துக்கொண்டு இருக்கிறது என்பதுதான் எங்களுக்குப் புரியவில்லை. ஆகவே, நான் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இப்படி அங்கீகாரம் இல்லாத பள்ளிகள் ஒன்று மட்டும் அல்ல; எங்களுடைய மாவட்டத்திலேயே திருவலத்தில் இன்ஃபன்ட் ஜீசஸ் என்ற ஒரு பள்ளி இருக்கிறது. அவர்கள் 60 மாணவர்கள் என்று NCTE-யிலே அனுமதி வாங்கிவிட்டு, 120 பேர்களைச் சேர்த்து, மீதி 60 பேர்களைப் பரிட்சை எழுதமுடியாமல் விட்டுவிட்டார்கள். அதேபோல், விழுப்புரத்தை எடுத்துக்கொண்டால், ஜெயசூர்யா டீச்சர் ட்ரெயினிங் பள்ளி; அதேபோல். முள்ளம்பாடியை எடுத்துக்கொண்டால் எம்.எஸ். உதயமூர்த்தி ஆசிரியர் பயிற்சிப் பள்ளி; அதேபோல், பவானியில், பவானி, அந்தியூர் ஜெயகாந்தி ஆசிரியர் பயிற்சிப் பள்ளி என்று, 1,200 மாணவர்களைச் சேர்த்துக்கொண்டு, எந்தவிதமான அங்கீகாரமும் இல்லாமல், இவ்வாறு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் தமிழ்நாட்டில் தங்களுடைய நிறுவனங்களை நிறுவி, ஒரு பகற்கொள்ளையையே அடித்து, பெரிய மோசடியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றன. அங்கீகாரம் இல்லாமல் இதுபோன்ற ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை நடத்தி, மாணவர்களிடம் பகற்கொள்ளை அடித்துக்கொண்டிருக்கின்ற இந்தக் கூட்டத்தின்மீது துறை இதுவரை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? அங்கு ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டு, ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். மற்றொருவர், ஆள் தலைமறைவு என்று இருக்கிறது. இவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுத்து, இனிமேல் அங்கீகாரம் இல்லாத பள்ளிகளே ஒரு நாள்கூட இயங்கக்கூடாது என்ற ஒரு நிலையை அமைச்சர் அவர்கள் தமிழகத்திலே உருவாக்குவாரா; இந்தப் பெரிய மோசடிக்கு முற்றுப்புள்ளி வைப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சுருக்கமாக இதற்கு விடை அளிக்கிறேன். தேவைப்பட்டால் பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையில்

[திரு. தங்கம் தென்னரசு] [2008 ஏப்ரல் 10

இதற்கு நீண்ட விடை அளிக்கக் காத்திருக்கிறேன். இந்த ஜே.பி.எஸ். ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கு—பொதுவாக, முன்பருவ ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுக்கு—Pre-primary Teacher Training Institute-களுக்கு 1995 ஆம் ஆண்டிற்குப் பிறகு எங்கேயுமே நாம் அனுமதி கொடுக்கவில்லை. ஆனால், இந்த ஒரு நிறுவனம் போலியாக சென்னையிலே ஒரு டிரஸ்ட் மூலமாகப் பதிந்து வைத்துக்கொண்டு, ஒரு அறக்கட்டளை என்ற பெயரிலே தமிழ்நாட்டில் 100 இடங்களிலே போலியான ஒரு அறக்கட்டளைமூலமாக இந்த மாதிரி ஒரு Training Institute நடத்திக்கொண்டு இருந்தது. அவர்கள் சொன்னார்கள்—அரசு இதை ஒன்றும் பார்க்காமல் இல்லை. இதிலேயே சொல்லியிருக்கிறோம். உடனடியாக என்னென்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறோம் என்று விவர அறிக்கையில் கொடுத்து இருக்கிறோம். இந்த Institute குறித்து உடனடியாக நாங்கள் பேப்பரில் கொடுத்துவிட்டோம். இந்த Institute-காரர்கள் என்ன செய்தார்கள் என்று கேட்டால், தமிழ்நாடு அரசு emblem மாதிரியே எல்லாவற்றையும் போட்டு, எல்லோருக்கும் வெளியிட்டார்கள். உடனே பத்திரிகையில் அறிவிப்புக் கொடுத்தோம்; இதுபோல் ஒரு பெரிய மோசடி நடக்கிறது, யாரும் இதில் சேர்ந்துகொள்ளாதீர்கள் என்று. அதையும் மீறி, பல மாணவர்கள் ஏமாந்து, பள்ளியில் சேர்ந்திருக்கிறார்கள். நாங்கள் அறிவிப்புக் கொடுத்ததற்கு, அவர்கள் இந்த அறிவிப்பை எதிர்த்தே கோர்ட்டுக்குப் போனார்கள், இப்படி ஒரு அறிவிப்பை அரசு கொடுக்கக்கூடாது என்று. அது court-ல் நிலுவையில் இருக்கிறது. நாங்கள் என்ன செய்திருக்கிறோம் என்று சொன்னால், court-லே மாத்திரம் வாதாடவில்லை. உடனடியாக இவர்கள்மீது கிரிமினல் வழக்குகள் தொடரப்பட்டு, அந்த நிறுவனத்தினுடைய தாளாளரின் மகன் கைது செய்யப்பட்டு இருக்கிறார். அவர் இப்போது ஜாமீனிலே வந்து இருக்கிறார். இதிலே அரசு நடவடிக்கை எடுக்காமல் இல்லை.

*முற்பகல் 11-00*

பொதுவாக இன்னொரு காரியத்தையும் சொன்னார்கள்; அரசு அங்கீகாரம் இல்லாமலேயே பல ஆசிரியர் பயிற்சி நிலையங்கள் இங்கே நடந்துகொண்டிருக்கின்றன என்று. என்ன செய்கிறார்கள் என்றால், NCTE-ல் போய் அங்கீகாரம் வாங்கிக்கொண்டு வருகிறார்கள். ஆனால் நம்மிடமிருந்து affiliation order வாங்குவதில்லை. வாங்காமல், 25 பேர்களைத்தான் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றால், 50 பேர்களைச் சேர்த்துக்கொள்கிறார்கள். கடைசியாக, மாணவர்களை முன்நிறுத்திக்கொண்டு, அவர்களை முன்னாலே வைத்துக்கொண்டு,

2008 ஏப்ரல் 10] [திரு. தங்கம் தென்னரசு]

பரிட்சை எழுதவேண்டும்; அவர்களை அனுமதிக்க வேண்டும் என்று சொல்லி ஒரு பெரிய மோசடி. ஏற்கெனவே அத்தனையையும் பட்டியலிட்டு--கடந்த ஆண்டிலே பார்த்தீர்கள் என்று சொன்னால், நாங்கள் கடந்த ஆண்டிலே எடுத்த நடவடிக்கையின் காரணமாக, 18-5-2007-லே ஒரு order-ஐப் போட்டோம். இந்த மாதிரி கல்வி ஆண்டு என்பது எதுவாக இருக்க வேண்டும்; பாடத் திட்டம் எதுவாக இருக்கவேண்டும் என்று முறைப்படுத்தி இருக்கிறோம். அதை எதிர்த்து அத்தனை பேரும் court-க்குப் போனார்கள். முதல் கட்டமாக, court-லே இத்தனை மாணவர்களை அனுமதியுங்கள் என்று சொன்னார்கள். ஆனால், அரசாங்கம் செய்த மேல்முறையீட்டை ஏற்றுக்கொண்டு இப்பொழுது தலைமை நீதிபதி அவர்கள், அது court-லே வருகிறபோது, முழுமையாக அரசு எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கைகளை அவர்கள் அப்படியே uphold பண்ணியிருக்கிறார்கள். அரசாங்கம் எடுத்த முழு நடவடிக்கையும் correct தான்; மாணவர்கள் பரிட்சை எழுதியிருந்தால்கூட, அரசாங்கத்தினுடைய அனுமதி இல்லாமல் எழுதியிருந்தால் ஒரு முடிவுகூட வெளியிடக்கூடாது என்று கடுமையான தீர்ப்பைத் தந்திருக்கிறார்கள். அரசு எடுத்திருக்கிற முழு முடிவுகளே அவற்றை நெறிப்படுத்த வேண்டும் என்பது. அங்கீகாரம் பெறாத இத்தகைய ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள்மீது நாங்கள் எடுத்திருக்கக்கூடிய கடுமையான நடவடிக்கைகளை இப்போது courtகூட உறுதிப்படுத்தி இருக்கிறது. தமிழகத்திலே மிகக் கடுமையான நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொண்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் ஒரு விளக்கத்தைத் தந்தார்கள். இதிலே நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இப்படி ஒரு நிருவாகம் ஒரு பள்ளியை நடத்துகிறபோது, அங்கு இருக்கக்கூடிய C.E.O. அல்லது D.E.O. அல்லது DIET என்று ஒவ்வொரு மாவட்டத்தில் வைத்திருக்கிறீர்கள், அவர்கள் இப்படி இவற்றினுடைய அனுமதியில்லாமல் நடந்துகொண்டிருக்கக்கூடிய பள்ளிகளை அவ்வப்பொழுதே அடையாளம் கண்டு, அதை உடனடியாக மாவட்ட நிருவாகத்தைக் கொண்டோ அல்லது உங்களுடைய துறையின்மூலமாகவோ நிறுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? Number One.

[திரு. சி. ஞானசேகரன்] [2008 ஏப்ரல் 10

Number two; அதாவது, 50 பேருக்கு அனுமதி வாங்கி இருப்பார்கள்; 100 பேரைச் சேர்த்துவிட்டு இருப்பார்கள். அப்படி, திருவலம், Infant Jesus பள்ளி; இதே மாதிரி பல பள்ளிகளுடைய மாணவர்கள் ஏமாற்றப்பட்டு இருக்கிறார்கள். அப்படிப்பட்ட மாணவர்கள் பரிட்சை எழுதக்கூடாது என்று உயர் நீதிமன்றத்திற்குச் சென்று அரசே ஒரு தடை ஆணை பெற்றிருக்கிறது. அவ்வாறு இப்பொழுது பாதிக்கப்பட்டிருக்கிற அந்த மாணவர்களுக்கு மட்டும் இந்த விதியைத் தளர்த்தி, ஒரு முறை அவர்களை பரிட்சை எழுத வைத்துவிட்டு, பிறகு வரக்கூடிய மாணவர்கள் யாரும் அந்த அனுமதி இல்லாத பள்ளியில் சேராமல் இருக்கக்கூடிய நிலையை அரசு உருவாக்குமா? உயர் நீதிமன்றத்தில் பெற்றிருக்கக்கூடிய தடை ஆணையின்மீது, மீண்டும் ஒரு Review Petition போட்டு, பாதிக்கப்பட்டிருக்கிற மாணவர்கள், ஏற்கெனவே அவர்கள் இரண்டு ஆண்டுகள் படித்துவிட்டார்கள்; அவர்களைப் பரிட்சை எழுத அனுமதித்து, அவர்களுடைய result-ஐக் கொண்டு வருவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விஷயத்தைப் பார்ப்போம் என்று சொன்னால், 2006-2007 ஆம் ஆண்டு NCTE Order-ஐ 251 பள்ளிகளில் வாங்கி இருந்தார்கள். நம்முடைய கல்வித் துறையின் ஒப்புதல் பெறாமல் இருக்கக்கூடிய அந்தப் பயிற்சி நிறுவனங்கள், 41 பயிற்சி நிறுவனங்கள்; அந்த 41 பயிற்சி நிறுவனங்களில், 34 பயிற்சி நிறுவனங்கள் court-க்குப் போனார்கள். Court-க்குப் போய், அவர்களுடைய மாணவர்களை, தமிழ்நாடு அரசினுடைய அனுமதியைப் பெறாவிட்டாலும் பரிட்சை எழுத வைப்போம் என்று சொன்னார்கள். அப்படி 34 பயிற்சி நிறுவனங்கள் court-க்குப் போகும்போது, 1981 மாணவர்களை மாத்திரம் முதலாம் ஆண்டுத் தேர்வு எழுதுங்கள் என்று court சொல்லியிருக்கிறது. இப்பொழுது எப்படி இருக்கிறது என்று கேட்டீர்களென்றால், 300 பேர் என்று வைத்துக்கொள்வோம், total ஆக; இதை இப்படியே நாம் அனுமதித்தோம் என்று சொன்னால், ஒவ்வொரு Training Institute-ம் இதை ஒரு வாடிக்கையாக வைத்துக்கொள்ளும். பள்ளி மாணவர்களை யாருக்கும் தெரியாமல் சேர்த்துக்கொள்வது என்பது, விளக்கில் ஆடக்கூடிய விட்டில் பூச்சி போலத் தெரிகிறது. இதுபற்றி விவரம்

2008 ஏப்ரல் 10] [திரு. தங்கம் தென்னரசு]

தெரியாமல் அவர்கள் மாட்டுகிறார்கள். இந்த அரசாங்கம் என்ன செய்யமுடியும்? DIET மூலமாக எல்லா DIET-லும் எது, எது என்று கொடுத்திருக்கிறோம். பத்திரிகைகளிலும் எது, எதெல்லாம் அங்கீகாரம் பெறாத பள்ளிகள் என்று பட்டியல் கொடுத்திருக்கிறோம்; சேராதீர்கள் என்று சொல்லி இருக்கிறோம். DIET-ல் போட்டிருக்கிறோம். C.E.O. Office-ல் list வைத்திருக்கிறோம். ஆனால், ஆங்காங்கே இருக்கக்கூடிய சில அப்பாவிகள் ஏமாந்து, இதில் சேர்ந்து விடுகிறார்கள். சேர்ந்துவிட்ட அவர்களையே பகடைக் காய்களாக வைத்துக்கொண்டு சில சுய நிதித் தனியார் பள்ளிகள், இங்கு குறிப்பிட்டிருக்கக்கூடிய பல்வேறு பள்ளிகள், இவர்களை முன்நிறுத்திக்கொண்டு இந்த claim-ஐச் செய்கிறார்கள். "அப்படித்தான் சொல்வார்கள், கடைசி நேரத்தில் வாங்கிக்கொள்ளலாம்" என்று சொல்வார்கள். ஒவ்வொரு முறையும் நாம் இதை அனுமதித்துக்கொண்டே போனால், இதற்கு ஒரு முற்றுப்புள்ளியை வைக்க முடியாது. ஒரு பக்கத்தில் கல்வி நிறுவனங்களை--இவர்களெல்லாம் யார்? ஒரு பயிற்சி நிறுவனம் என்று ஒரு ஓலைக் கொட்டகையில் இருக்கிறது. இப்படிப்பட்டவர்கள் எல்லாம் நம்முடைய அங்கீகாரம் இல்லாமல், எங்கேயோ ஒரு இடத்தில் அங்கீகாரம் வாங்கிக்கொண்டு வந்து, நாம் அவ்வாறு பண்ணினோம் என்றால், இவர்கள், பிற்காலத்தில் வரக்கூடிய மாணவர்களுக்குச் சொல்லித் தரக்கூடிய ஆசிரியர்களாக உருவாகிக்கொண்டு போனால், இது வருங்காலச் சந்ததியினருக்கு நாம் செய்யக்கூடிய பெரிய தவறாகக்கூட அமைந்துவிடும். எனவே, அரசு எச்சரிக்கையாக இருக்கிறது. இதிலே மனிதாபிமான முறையில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நீங்கள் சொல்லக்கூடிய கருத்தை--மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் மணி அவர்கள்கூட பல முறை இங்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்; நீதிமன்றத்திலேகூட இப்படி ஒரு தீர்ப்பு வந்திருக்கிறது; இருந்தாலும், இது குறித்த முடிவினை--மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்கு நான் எடுத்துச் சென்று, அதற்குப் பிறகு கலந்து ஒரு முடிவினை மேற்கொள்ள முடியும்.

## 4. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.